Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 359

வெள்ளிக்கிழமை
21 நவம்பர் 2025

கார்த்திகை 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வடக்கில் ஞாயிறன்று கனமழை!

யாழ்ப்பாணம், நவ. 21
இலங்கையின் தென் கிழக்கே புதிய வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியொன்று உருவாகியுள்ளதால், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மிதமானது முதல் கனமானது வரை 11

# புதிய அரசியலமைப்பில் மீண்டும் ஏக்கிய இராச்சிய?

### சுமந்திரன் சூசகம்



**கொழும்பு, நவம்பர் 21**
**இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளின் (ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பு உருவாக்கம்) அடிப்படையில் அமைந்த நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாக தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலர் சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளார்.** 11



## மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### தமிழர் தாயகத்தில் ஏற்பாடுகள் தீவிரம்

யாழ்ப்பாணம், நவ. 21
தமிழர் தாயகக் கனவுகளைச் சுமந்து தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த அனைத்து மாவீரர்களுக்கும் வணக்கம் செலுத்தி நினைவு கூரும் மாவீரர் வாரம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்ப 11



## வலி.வடக்கில் மாவீரர் தினமன்று இறைச்சிக் கடைகளுக்குப் பூட்டு

### நேற்று அஞ்சலிப்பும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
மாவீரர் தினத்தன்று வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் இறைச்சிக்கடைகளை மூடுவதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த 11

### வடமாகாணத்தின்

## மீள்குடியேற்றங்கள் தொடர்பில் ஜனாதிபதி விசேட அவதானம்!

### அமைச்சர் சுனில் ரணசிங்க தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 21
வடமாகாணத்தின் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர விசேட அவதானம் செலுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் கூடுதல் அவதானம் செலுத்துமாறு தனிப்பட்ட ரீதியில் எனக்கு அறிவுறுத்தியுள் 11

### 2026ஆம் ஆண்டுமுதல்

## அனுமதி இல்லாமல் இயங்குவதற்கு நுண்நிதி நிறுவனங்களுக்குத் தடை!

### வேலணை பிரதேசசபை தீர்மானம் வட்டி வீதத்தைக் குறைக்கவும் முடிவு

யாழ்ப்பாணம், நவ. 21
வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில், நுண்நிதி நிறுவனங்கள் எவையும் அனுமதி இல்லாமல் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
2026ஆம் ஆண்டுமுதல் இந்தத் தடை நடைமுறைக்கு வரும் என்றும் 11

### அரசியற் கைதியான

## ஆனந்தசுதாகரின் தாயார் மறைவு பிள்ளைகள் இருவரும் அந்தரிப்பு !

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு இரங்கல்

யாழ்ப்பாணம், நவ. 21
தமிழ் அரசியற் கைதியான ஆனந்தசுதாகரின் பிள்ளைகளைப் பராமரித்து வந்த அவர்களது பேர்த்தியார் தேவதாஸ் கமலா நேற்றுமுன் தினம் சுகவீனம் 11

## திடீர் உடல்நலக்குறைவு; 9 மாத சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ. 21
திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு ஒன்பது மாத ஆண் சிசுவொன்று நேற்று உயிரிழந்துள்ளது.
இளவாலை உயரப்புலம் பகுதியைச் சேர்ந்த தர்ஷன் அஸ்வின் என்ற குழந் 10



### முச்சந்தி முரளி

**'திரும்பவும் உந்த ஏக்கிய ராச்சிய காய்ச்சல் அனலடிக்கப் போகுது கண்டியளோ'**

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து குடும்பத்தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
கைகழுவச் சென்றபோது கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 10

## கையூட்டு பெறும்வேளையில் சிக்கினார் பொலிஸ் சார்ஜண்ட்!

### நெடுங்கேணியில் சம்பவம்

வவுனியா, நவ. 21
வவுனியா நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் சார்ஜண்ட் தர உத்தியோகத்தர் ஒருவர் கையூட்டு பெற முற்பட்டபோது நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 11

## மூதாட்டி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 21
தனிமையில் வசித்து வந்த மூதாட்டியொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் - ஆனைப் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4261
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 13 25 29 51
விசேட எழுத்து T

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1328
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 34 47 48 50

**NLB ஜய**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0287
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 2 7 7 5

**மெகா பவர்**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2367
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 11 36 50 71

**மஹஜன சம்பத**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 6019
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 0 9 6 6 4 8

**தன நிதானய**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2049
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 33 35 54 80
விசேட எழுத்து D

**சுப தவசக்**
திகதி 20.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0135
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 14 20 28

# புதிய தேர்தல் முறையை உருவாக்க அனைவரது கருத்துகளும் தேவை

*அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு*

**கொழும்பு, நவ.21**

**மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகப் புதிய தேர்தல் முறைமை ஒன்றை உருவாக்கும்போது சகல தரப்பினரது ஆலோசனைகளையும் கோரவேண்டும். எல்லை நிர்ணய பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். அது தேர்தலைப் பிற்போடும் செயற்பாடாக அமையாது. சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவது ஜனநாயகமிக்கதாக அமையும் என அமைச்சரும், சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் தற்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் பழைய தேர்தல் முறைமையை இரத்துச் செய்து, புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தியது. புதிய தேர்தல் முறைமை கலப்புத் தேர்தல் முறைமையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

கலப்புத் தேர்தல் முறைமை 50 சதவீதம் தொகுதி அடிப்படையிலும், 50 சதவீதம் மேலதிக பட்டியல் அடிப்படையிலும் காணப்பட்டது. நாட்டில் தற்போது மாகாணசபைத் தேர்தல் முறைமை ஒன்று உள்ளது. புதிய தேர்தல் முறைமையில் எல்லை நிர்ணயம் பிரதான ஒன்றாகக் காணப்படுகிறது.

எல்லை நிர்ணயத்தில் தொழில்நுட்ப விடயங்கள் உள்ளடக்காமல் இருப்பது தற்போதைய பிரச்சினையாக காணப்படுகிறது. அதற்குத் தீர்வு காணவேண்டும்- என்றார். (ஏ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0727
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 5 5 1 3 5 1

**Super Ball**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2993
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 14 26 51 66

**சனிதா**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 09 11 76 80
வெற்றி வாரம் 5154

**SASIRI**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0823
வெற்றி இலக்கம் 04 35 50

**லக்ன ராசி**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம் 04 11 41 62
சீட்டிழுப்பு வாரம் 4705

**KAPRUKA**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கம் 14 27 33 48
வெற்றி வாரம் 2169

**அத கோடிபதி**
திகதி 20.11.2025 தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கம் 20 30 43 58
வெற்றி வாரம் 2819

## அநுர மட்டுமே பாஸ் ஏனையோர் பெயில்

*ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு*



கொழும்பு, நவ.21

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாஸ், தேசிய மக்கள் சக்தியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெயில் என்றுதான் கூறவேண்டும். ஜனாதிபதிமீதுதான் மக்களுக்கு நம்பிக்கை உள்ளது. ஏனையோர்மீது இல்லை என்று முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நுகேகொட கூட்டமென்பது நாமலை ஜனாதிபதியாக்குவதற்கான நடவடிக்கை அல்ல. ஜனநாயகத்துக்கானது. நுகேகொட கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பது சாத்தியமில்லை. ஜீவன் தொண்டமானின் திருமண நிகழ்வில் பங்கேற்பதற்கு அவர் 21 ஆம் திகதி காலை இந்தியா செல்கின்றார்.

அதேபோல ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிட்டாலும் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்களைக் கூட்டத்தில் பங்கேற்க வைப்பார்கள் - என்றார். (ஏ-44)

## சிங்களக் குடியேற்றங்களுக்கான ஆரம்பமே புத்தர் சிலை வைப்பு

*ஜனநாயகப் போராளிகள் கட்சி கண்டனம்*



யாழ்ப்பாணம்,நவ.21

சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதற்கான ஆரம்பமாகவே, மக்கள் இல்லாத இடத்தில் புத்த சிலைகள் அமைக்கப்படுகின்றன.

திருகோணமலையில் புத்தர் சிலை அமைக்கப்பட்டதன் பின்னனியும் அதுவே என்று ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

திருகோணமலையில் கடற்கரையில் சட்டத்துக்குப் புறம்பாக மக்களின் எதிர்ப்பையும் மீறி புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

கடந்தகால அரசாங்கங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல விகாரைகளை அத்துமீறிக் கட்டியிருந்தன. இராணுவம், பொலிஸார், புத்த பிக்குகள் ஆகியோரின் துணையோடு புத்த விகாரைகள் அமைக்கப்பட்டன. புத்த விகாரைகள், சிலைகள் ஆக்கிரமிப்புச் சின்னமாகவே இருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. மதங்களுக்கிடையில் ஒரு பிளவை அல்லது பிரச்சினையை ஏற்படுத்தும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பெரும்பான்மைப் பலத்துடன் தற்போதைய அரசாங்கம் ஆட்சி அமைத்தது.

இன,மத, மொழி வேறுபாடின்றி தாம் ஆட்சி செய்வதாகக் கூறுகின்றனர். ஆனால் கடந்த கால அரசாங்கங்கள் எவ்வாறு இனவாத உச்சத்தில் ஆட்சி செய்தனவோ, அதன் ஆரம்பமே இந்தப் புத்தர் சிலை விவகாரம். மக்களிடையே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டுமாக இருருந்தால் இவ்வாறான செயற்பாடுகள் இனிமேலும் இடம்பெறக்கூடாது என்றார். (ஏ-27)

## புத்தர் சிலையைக் கைதுசெய்து ஜனாதிபதி அநுர சாதனையாம்

*எண்ணெய் ஊற்றுகிறார் கம்மன்பில*

கொழும்பு, நவ.21

புத்தர் சிலையைக் கைதுசெய்த முதல் ஆட்சியாளராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சாதனை படைத்துள்ளார். இந்தச் சம்பவத்தால் ஒட்டுமொத்த பௌத்த சமூகமும் அதிர்ச்சியடைந்துள்ளது என்று பிவிதுரு ஹெல உருமய வின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

திருகோணமலை புத்தர் சிலைச் சம்பவம் 21ஆம் திகதி பேரணியை வெற்றிபெறச் செய்வதற்காக நாங்கள் செய்த ஒரு தந்திரம் என்று ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் பல முக்கியஸ்தர்கள் கூறுகின்றனர். பிக்குகளைத் தாக்கி, புத்தர் சிலையை அகற்றுவதற்கு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியது நாங்களா?

நாட்டை ஆட்சி செய்த ஏகாதிபத்தியவாதிகள்கூட பௌத்த மதத்தை இவ்வளவு அவமானப்படுத்தவில்லை என்பதை நாங்கள் மிகவும் வேதனையுடன் நினைவுபடுத்த விரும்புகிறோம். இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நுகேகொட பேரணியில் இந்த அரசாங்கத்தின் முடிவை ஆரம்பிக்கின்றோம்- என்றார். (ஏ-இ)

## வாய்க்கால் சீரமைப்பு

யாழ்ப்பாணம்.நவ.21

தற்போதைய இடர்கால நிலைமையைக் கருத்திற்கொண்டு கோப்பாய்ப் பகுதியில் உள்ள வெள்ளவாய்க்கால்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

வாய்க்கால்களில் தேங்கியுள்ள வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் கனரக வாகனங்கள் மூலம் கழிவுகள் அகற்றப்பட்டு, துப்புரவு செய்யப்படுகின்றன. (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆயுள்வேத மருந்துத் தயாரிப்பு மூலிகைகளுக்கு பற்றாக்குறை



**கொழும்பு, நவ.21**

**உள்ளூர் ஆயுள்வேத மருந்து உற்பத்திக்குத் தேவையான அத்தியாவசிய மருத்துவ தாவரங்களின் கடும் பற்றாக்குறையால் ஆயுள் வேத த மருந்துக் கூட்டுத்தாபனம் பெரும் உற் பத்தி நெருக்கடியை எதிர்கொள்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.**

நாடளாவிய ரீதியில் பற்றாக் குறை நிலவுவதால் மூலிகை களை வாங்குவது மிகவும் கடினமாக உள்ளது என்று பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் தெரிவித் துள்ளனர்.

உற்பத்தி அளவைப் பராம ரிக்க, அதன் பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் வலைய மைப்புக்கு வெளியே கூட, வெளிப்புறமூலங்களிலிருந்து மூலிகைத் தாவரங்களை பெற றுக்கொள்ள கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

கடுமையான பற்றாக்குறை யில் உள்ள மூலிகைகளில் கற்றாழை, கிராதா, இலவங்கப் பட்டை, நபோத்து, பச்சை ஹத் தவாரிய கிழங்கு, உலர்ந்த தத்த கிழங்கு மற்றும் பச்சை வௌகோலா ஆகியவை அடங்கும். பல ஆயுள்வேத மருந்துகளுக்கான முக்கிய மூலப்பொருளான கற்றாழை கிட்டத்தட்ட மூன்று மாதங்க ளாக கிடைக்கவில்லை. இது உற்பத்தியை கடுமையாக பாதிக்கிறது என்று தெரிவிக்கப் படுகின்றது. (எ-இ)

## அச்சுவேலியில் அதிகூடிய மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ.21

கடந்த செவ்வாய்க்கிழமை காலை முதல் நேற்றுப் புதன் கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணிநேரத்தில் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி அச்சுவேலியில் பதிவாகியுள்ளதாக திருநெல் வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித் துள்ளனர்.

இதற்கமைய, குறித்த காலப்ப குதியில் அச்சுவேலியில் 58.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதி வாகியுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் பருத் தித்துறையில் 31.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்ச்சியும், திரு நெல்வேலியில் 21.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்ப் பாணம் கோட்டை மற்றும் பண் ணையில் 16.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ்.நகரில் 14.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச் சியும் பதிவாகியுள்ளதாகவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (ச-66)

## மரக்கறிச் செய்கை மழையால் பாதிப்பு



யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாள் களாகப் பெய்த தொடர் மழையால் மரக்கறிச்செய்கை பாதிக்கப்பட்டுள் ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தாழ்வான நிலப்பகுதிகளில் வெள்ளம் தேங்கியிருப்பதால், பயிரிடப்பட்ட மரக்கறிப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள் ளன.

கத்தரி, கீரை, கோவா, வெண்டி, தக்காளி, மிளகாய் போன்ற பயிர்கள் பெரும்பாலனான இடங்களில் அழி வடைந்துள்ளன. அதேவேளை சந்தைகளுக்கு மரக்கறி களின் வருகை குறைந்துள்ளதால், அவற்றின் விலையும் அதிகரித்துள்ளது. (க-17)

## தாய்நாடு திரும்பினர் 27 இந்திய மீனவர்கள்

கொழும்பு, நவ.21

இலங்கைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 27 இந் திய மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை விடுதலை செய் யப்பட்டு தாய்நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்கு அத்துமீறி மீன்பிடித்த குற்றச் சாட்டில் கைதுசெய்யப்பட்ட குறித்த மீனவர்கள் இலங்கை அரசால் அண்மையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ் தானிகராலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் விமா னம் மூலம் தமிழ்நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கு இடையேயான இராஜதந்திர மட்டத்திலான பேச்சுகள் மற்றும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## பிழையை மறைக்கிறது பெரும் பிழை

முழுப்பூசணிக்காயைச் சோத்துக்க மறைக்கேலுமோ? ஆனால் மறைக்கலாம் எண்டு சிலர் கனவு காணுகினம். நேற்றுப் பட்சியில சொன்ன ஏ.எல்.சோதினை விடைத்தாள் அனுப்பாத விசயத்தை இப்பிடி மூடிமறைக்க வெளிக்கிட்டவைக்கு. பட்சி அதை மோப்பம் பிடிச்சு வெளியில கொண்டந்தது பெரிய தலையிடியாப் போட்டுதாம். நேற்று முழுக்க "என்னெண்டு இந்த விசயம் வெளியில கசிஞ்சது?" எண்டு தலையைப் பிய்ச்சுக்கொண்டிருக்கினமாம்.

பூனை கண்ணைமூடிப் பால்குடிக்கேக்க உலகமே இருண்டு போட்டுது எண்டு நினைக்கிறமாதிரி யெல்லோ இந்த விசயம் கிடக்குது. 21 பிள்ளையள் பாதிக்கப்பட்டு இருக்கேக்க. அவையள் எப்பிடியோ இதை வெளியில கொண்டுவரத்தானே பாப்பினம். ஏனெண்டால் இது அவையின்ர வாழ்க்கைப் பிரச்சினை. அதோட அவையின்ர அடிப்படை மனித உரிமையும் மீறப்பட்டிருக்கு. இப்ப அந்த 21 பேரில ஒரு பிள்ளை வழக்குப் போட்டால் கூட, அந்தப் பாடத்துக்குத் திரும்பவும் சோதினை வைக்கவேண்டி வரும். அதுக்குத்தான் சான்ஸ் கூட. ஆனால் அப்பிடி ஒரு அவமானம் வரக்கூடாது எண்டும், இந்தத் திருகுதாளம் மேல்மட்டங்களுக்குத் தெரியக்கூடாதெண்டும் நினைச்சுத்தான் இந்த ஒளிப்பு மறைப்பில எக்ஸாம் டிப்பார்ட்மெண்ட் இறங்கினதாம். அந்த எக்ஸாம் சென்ரரில நிண்ட எல்லாரையும் கூப்பிட்டு, "இந்த விசயம் வெளியில வரக்கூடாது. வந்தால் உங்களிலையும் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்" எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் அப்பிடிச் சொன்னால் தான் அந்தக் கதை உடன வெளியில வரும் எண்டு சோதினை வைக்கிற திணைக்களத்துக்குத் தெரியாமல் போட்டுது போல.

சம்பவம் நடந்த அண்டைக்கு அந்த எக்ஸாம் பேப்பரைப் பிள்ளையளுக்கு குடுத்து . திரும்ப விடை எழுதினபிறகு வாங்கினவரும், எக்ஸாம் ஹோலுக்குப் பொறுப்பா நிண்டவரையும் தான் இப்ப எக்ஸாம் டியூட்டில இருந்து நிப்பாட்டி இருக்கினம். இப்பிடி திணைக்கள மட்டத்தில நடவடிக்கை எடுக்கேக்கையே அந்த விசயம் வெளியால போகுமெண்டும் அவைக்குத் தெரியேலையே. இப்பிடி 21 பிள்ளையளின்ர வாழ்க்கையில நெருப்பை அள்ளிப் போட்ட விசயமே படுபிழையான வேலை, அப்பிடியான பிழையை ஒளிச்சு மறைக்க வெளிக்கிட்டது இன்னும் பிழையான அலுவல் எல்லோ. அந்தப் விடைப்பேப்பரை அனுப்பாமல் விட்டவையோட சேர்த்து, உந்த விசயத்தை ஒளிச்சு மறைச்சவையையும் தண்டிக்கோணும். இப்பிடி அவையள் இதுக்குமுதல் எத்தினை தில்லுமுல்லுகளை ஒளிச்சினமோ, ஆர் கண்டது. அதைவிட இப்ப ஒரு புதுத்தகவல் கிடைச்சிருக்கு. ஆனால் உறுதிப்படுத்தப்படாத விசயம். அது என்னெண்டால் இப்பிடி அனுப்புப்படாமல் பிறகு காகிதாதியோட கிடந்த விடைப்பேப்பர்களை , அந்த எக்ஸாம் டியூட்டியில நிண்ட ஒருத்தர் மறந்துபோய் தன்ர வீட்டை கொண்டுபோட்டார் எண்டும், பிறகு அதை மறைக்கத்தான் காகிதாதியோட கொண்டந்து உள்ளுக்க ஒளிச்சு வைச்சவர் எண்டும் ஒரு கதை அடிபடுகுது. இனி விசாரணையில தான் அது உண்மையோ பொய்யோ எண்டு தெரியவரும் கண்டியளோ.

padsi@uthayan.com
- பட்சி

# உள்ளூராட்சிமன்றங்களுக்கு வாகனங்கள் இறக்குமதி!

கொழும்பு, நவ.21

உள்ளூராட்சி மன்றங்களுக் குத் தேவையான 700 அத்தி யாவசிய வாகனங்களை உள்ளடக்கிய வாகனத் தொகு தியை அரசாங்கம் இறக்கு மதி செய்யவுள்ளதாக வர்த் தக அமைச்சர் வசந்த சமர சிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வாகனத் தொகுதியில் 100 கழிவுநீர் உறிஞ்சும் வாக னங்கள், 175 டிராக்டர்கள், 100 பேக்ஹோக்கள், 160 டிப்பர் ரக வாகனங்கள், 75 மோட்டார் கிரேடர்கள் மற்றும் 90 முச்சக்கர வண்டிகள் அடங்குகின்றன. பெரும்பா லான உள்ளூராட்சி மன்றங் கள் அத்தியாவசிய வாகனங் கள் பற்றாக்குறையாலும், தற்போதுள்ள வாகனங்கள் பழமையாக அல்லது சேதம டைந்து இருப்பதாலும் தமது பணிகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின் றன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளுக்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

**இடபம்:** தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன்–மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மிதுனம்:** தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களின் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு வீட்டில் குடும்பத்துடன் தெய்வப்வழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்படும். நண்பர்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**கடகம்:** வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண் டாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவு செய்வீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** அரசாங்கவகையில்எதிர்பார்த்தகாரியம் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சி கள் சாதகமாகும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மாநகரசபை உறுப்பினர் ராஜ்குமாரின் ஒழுங்கமைப்பில் நல்லூர் 4ஆம் வட்டார மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச-41-20)

## மகாபாரதத் தொடர் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.21

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரதம் எனும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல்10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் ஆசிரியரும், சைவப்புலவருமான இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ச-66)

## தீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.21

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய சமய தீட்சை வழங்கும் விஞ்ஞாபனம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8மணிமுதல் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு 0769947282 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

## தாவராவதானிப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.21

வடமாகாண மரநடுகை மாதத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நடத்தும் தாவராவதானிப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் ஆலயத்திற்கு அருகாமையில்) நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் மாணவர்கள் மட்டுமல்லாது பால், வயது வேறுபாடின்றி எவரும் முன்பதிவு இல்லாமல் பங்குபற்றமுடியும். போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு தாவராவதானி சான்றிதழோடு, பரிசுகளும் வழங்கப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0775565460 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது. (க-இ)

## குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.21

குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளவெட்டித் தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மேலதிக [illegible] கொண்டு வருகின்றனர். (க-63)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,நவ.21

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச பொதுமக்கள் தமது தேவைகளை நடமாடும் சேவையில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-9-66)



## நெடுந்தீவுக்கான பொக்கிஷங்கள் ஆய்வுகளுடனான நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.21

நெடுந்தீவுக்கான பொக்கிஷங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்ட விவரங்களை உள்ளடக்கி, நெடுந்தீவு சூழல் சுற்றுலா (இக்கோ ரூரிசம்DELFT ECO TOURISM) எனும் நூல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

நெடுந்தீவு தொடர்பாக கியூமெடிக்கா நிறுவனத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு, வவுனியா பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். விஜயமோகனின் ஒருங்கிணைப்பில் இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நூலில் நெடுந்தீவில் உள்ள மருத்துவக் குணம் கொண்ட 170 தாவரங்கள், வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் பறவைகள் மற்றும் சுற்றுலா இடங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், பறவைகள், விலங்குகளைப் பாதுகாத்தல், சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு பல ஆய்வுகளின் அடிப்படையில் இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

கியூமெடிக்கா சர்வதேச பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜொகானஸ் பீட்டர் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மேலதிக மாவட்டச் செயலர் க.சிவகரன், மேலதிக மாவட்டச் செயலர் (காணி) பா. ஜெயகரன், கியூமெடிக்கா பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் சசின்து டிமெல் மற்றும் மாகாண சுதேச வைத்திய ஆணையாளர் ரி. சர்வநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-9)



## இலங்கை இந்துமாமன்றத்துக்கு பம்பலப்பிட்டியில் பணிமனை

கொழும்பு,நவ.21

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் ஆன்மிக, சமூக, கல்வி, வெளியீட்டுப் பணிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன், கொழும்பு 4, பம்பலப்பிட்டி, அசோகா காடின்ஸ் இல. 22 இல், நிரந்தரப் பணிமனை கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டுள்ளது.

மாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மற்றும் பொதுச்செயலாளர் வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் இந்தப் பணிமனையைத் திறந்துவைத்தனர்.

அகில இலங்கை இந்துமாமன்றம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காகவும், மாமன்றத்தின் பொதுக்கூட்டங்களுக்குச் சமூகமளிப்பதற்காக வெளியிடங்களிலிருந்து வருகைதரும் மாமன்றத்தின் அங்கத்துவச் சங்கங்களின் உறுப்பினர்கள் சிரமமின்றித் தங்குவதற்கு ஏதுவாகவும் மூன்று மாடிகளுடன் கூடிய இந்தப் பணிமனை திறக்கப்பட்டுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம் (நவம்பர்)

குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும் என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்.

– வங்காரி மாதாய்
(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# மீண்டும் பழைய குருடியா?


தேசிய இனப்பிரச்சினைக்கு அடுத்த ஆண்டில் தீர்வுக்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று தன்னைச் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்குக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பழைய அரசியல் தீர்வுகள் போதுமானவை இல்லை புதிய அரசியல் தீர்வு நோக்கிச் செல்லவேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் ஆட்சியில் இருந்தவர்களும் தமிழ் மக்களின் அரசியல் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதாகப் பல சந்தர்ப்பங்களில் உறுதியளித்தனர். ஆனால் அவ்வாறு எதுவுமே நடக்கவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் தற்போது ஒரு வாய்மொழி உறுதியைத் தந்திருக்கின்றார். ஆனால் மிகப் பரந்த விடயப்பரப்பைக் கொண்டுள்ள இந்த விடயத்தை அடுத்த ஆண்டில் சாத்தியமாக்கிவிட முடியுமா என்பது ஒரு கேள்விக்குறியே. இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி இன்னமும் தற்போதைய அரசாங்கம் ஒரு அடியைக்கூட எடுத்துவைக்காத நிலையில் இந்தக் கேள்வியும், சந்தேகமும் எழுவது இயற்கையானதே.

நாட்டின் கடந்தகால வரலாறு வடக்கு மற்றும் கிழக்கு மக்களிடையே ஆழமான அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் – ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க விரும்பினால் முதலில் அதற்கான தெளிவான நடைமுறை நடவடிக்கைளை ஆரம்பிக்கவேண்டியது கட்டாயமானது. முதலில் அதற்கான கால அளவைப் பகிரங்கமாக மக்கள் மத்தியில் அரசாங்கம் பகிரங்கப்படுத்தவேண்டும். அரசியலமைப்பு வரைவுக் குழு எப்போது அமைக்கப்படும்? மக்கள் ஆலோசனைகள் எப்போது பெறப்படும்? நாடாளுமன்றத்தில்விவாதம் எப்போதுநடைபெறும்?நிறைவேற்றத்திற்கான திட்டம் என்ன? என்ற கேள்விகளுக்கு தெளிவான பதிலை வழங்கவேண்டும். அவ்வாறில்லாமல் பொத்தாம் பொதுவாக அடுத்த ஆண்டு தீர்வு நடவடிக்கை தொடங்கும், தீர்வு கிட்டும் என்பது – கடந்த ஆட்சிகளின் தடத்தைப் பின்பற்றுவதாகவே இருக்கும்.

வடக்கு–கிழக்கு மக்களின் பிரச்சினைகள் புதிய அரசமைப்பால் தீர்க்கப்படும் என்றால், நில உரிமைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பொறுப்புணர்வு, மாகாணங்களின் நிதி மற்றும் நிர்வாக அதிகாரம், மொழி உரிமைகள், பாதுகாப்புப் படையினரின் அதிகப்படியான பரம்பல் போன்ற விடயங்கள் எவ்வாறு கையாளப்படும் என்பதையும் அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டியது அவசியம். சமாளிப்புகள்மூலம் காலத்தைக் கடத்தாமல் அரசாங்கம் தனது அரசியல் நேர்மையை வெளிப்படுத்தவேண்டும்.

நாட்டில் மேலோங்கியிருக்கும் இன–மதவாதங்களுக்கும், சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பது மிக முக்கியமானது – மிக அவசரமானது. பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிப்பீடத்தில் இருக்கும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், தங்களுக்குக் கிடைத்துள்ள வரலாற்றுத் தருணத்தைப் பயன்படுத்திநாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லுமா? அல்லது கடந்த கால அரசாங்கங்கள் போன்று பழைய குருடி கதவைத் திறவடி என்பதைப் போன்று, வாய்மொழிகள் மூலம் காலத்தைக் கடத்தி நாட்டை சகதியில் அமிழ்த்திச் செல்லுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




# இலக்கைக் கடந்தது வரி வருமான வசூல்


கொழும்பு, நவ.21

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வரலாற்றிலேயே உயர்ந்த அளவான வரி வருமான வசூலை 2025ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளது.**

இந்த மாதம் 17ஆம் திகதிவரை கிடைத்த கணக்குப்படி, மொத்த வருவாயாக 2,002,241 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இந்த வருவாய் தொகை, 2024 இல் பதிவான வருவாயை விட 60,079 மில்லியன் ரூபா அதிகம் என உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ருக்தேவி பி. ஹெச். பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2024 இல் மொத்த வசூல் 1,942,162 மில்லியன் ரூபாவாகும். இதை 2025 இல் முதல் 11 மாதங்களிலேயே உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கடந்துள்ளது.

இந்தச் சாதனை அரசின் நிதி நிலையைப் பலப்படுத்துவதோடு தேசிய வருமானச் சேகரிப்பில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு; துப்பாக்கிதாரி கைது

கொழும்பு, நவ.21

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தி நபரொருவரைக் கொலை செய்த துப்பாக்கிதாரி ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பு குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 7ஆம் திகதி கொட்டாஞ்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில், கார் ஒன்றில் வந்த நபரொருவர் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தினார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 39 வயதுடையவர் எனவும், கடுவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரை 72 மணிநேர தடுப்புக்காவலில் வைத்து கொழும்பு குற்றப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் மூவர் சிக்கினர்!

கொழும்பு, நவ.21

கட்டுநாயக்க விமான நிலையத்தில் மூன்று பயணிகள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

40 மில்லியன் ரூபா மதிப்புள்ள குஷ் போதைப்பொருள்களைத் தங்கள் பொதிகளில் மறைத்து வைத்துக்கொண்டு நாட்டுக்கு வந்த குற்றச்சாட்டில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் கொழும்பு மற்றும் வெல்லம்பிட்டிப் பகுதிகளில் சாரதிகளாகப் பணிபுரியும் நபர்கள் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)

# வாகன விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு,நவ.21

ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து வந்த முச்சக்கர வண்டியும், ஹற்றனிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ஹைஏஸும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டிச் சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார். (ச)

# இந்தியப் போர்க்கப்பல் இலங்கைக்கு வருகை



கொழும்பு, நவ.21

இந்தியக் கடற்படையின் போர் கப்பலொன்று இலங்கையை வந்தடைந்துள்ளது. கடற்படை மரபுகளின்படி இலங்கைக் கடற்படையினர் அந்தக் கப்பலைகொழும்புத் துறைமுகத்தில் வரவேற்றனர். இந்தக் போர்க் கப்பல் தங்கி நிற்கும் இங்கு காலத்தில், இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையேயான நட்பை மேம்படுத்துவதற்காக இலங்கைக் கடற்படை ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் கப்பலின் அங்கத்துவக் குழுவினர் பங்கேற்கவுள்ளனர். (ச-இ)

நாளை
சனிக்கிழமை – கார்த்திகை 6
22.11.2025
சுபநேரம் : 03.10 - 0440
ராகுகாலம் : 09.10 - 10.40

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மட்டும் இராணுவத்தின் 12 சிகை அலங்கரிப்பு நிலையங்கள்

## வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டு

வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் இராணுவத்தினரால் 12 சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றால் சிகையலங்கரிப்பாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்றும் வட மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் ஒரேயொரு சிகை அலங்கரிப்பு நிலையம் மட்டுமே நடத்தப்படுகின்றது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதை மறுத்துள்ள வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டி யுள்ளது. அந்தச் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை தொண்டமானாறு வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாம், வவுனியாவில் பம்பைமடு இராணுவ முகாம், வவுனியா சிறைச்சாலைக்கு முன், இரட்டைப் பெரியகுளம் இராணுவ முகாம், மன்னார் வீதியில் அமைந்துள்ள பரிச்சங்குளம் இராணுவ முகாம், கிளிநொச்சி மாவட்டத்தில் விசுவமடு புன்னை நீராவியடியிலுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களம் இணைந்த கட்டளைத் தலைமையகம், முல்லைத்தீவு முருகண்டி கால்நடைப் பயிற்சிக் கல்லூரியடி இராணுவ முகாம், முருகண்டி எரிபொருள் நிரப்பு நிலையம் அருகாமையுள்ள இராணுவ முகாம், அக்கராயன் முருகண்டி விசேட படையணி இராணுவ முகாம் மற்றும் கேப்பாபிலவு கொண்டமடு வீதி 59ஆம் படைப்பிரிவு, மன்னார் மாவட்டத்தில் கள்ளியடி இலுப்பைக்கடவை மற்றும் திருக்கேதீச்சரம் முள்ளிப்பள்ளத்திலும் இராணுவத்தினரால் சிகை அலங்கரிப்புநிலையங்கள் நடத்தப்படுகின்றன. வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் எல்லைப் பகுதிக்குள் அமைந்துள்ள இராணுவ முகாம், விசேட அதிரடிப்படை முகாம், சிவில் பாதுகாப்புப் படையணி முகாம், பொலிஸ் நிலையம், சிறைச்சாலை ஆகிய பகுதிகளை அண்டிய அல்லது அதனை உள்ளடக்கிய பகுதிகளில் இராணுவத்தினரால் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நடத்தப்படுகின்றன. இதனால் எமது அங்கத்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் எங்கள் சங்கக் கட்டுப்பாடுகளை மீறும் செயற்பாடுகளும் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இந்தச் சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூடுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றுள்ளது. (எ-66)

# தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட இனப்பரம்பல்

## சத்தியலிங்கம் குற்றச்சாட்டு

வவுனியா,நவ.21

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியமர்த்தி திட்டமிட்ட இனப்பரம்பலை ஒவ்வொரு அரசாங்கங்களும் மேற்கொள்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.


பொதுநிர்வாகம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எங்குமில்லாத நிர்வாக நடைமுறை வடக்கு மாகாணத்தில் மட்டும் காணப்படுகின்றது. மகாவலி எல் வலயம் கொண்டுவரப்பட்டு மாகாணத்துக்கு வெளியே இருந்து சிங்கள மக்கள் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கான புதிய பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட்டு, முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டது.

அந்தப் பிரதேச செயலர் பிரிவு 6 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு, அதில் 5 வட்டாரங்கள் வவுனியா வடக்கு பிரதேசசபையுடனும், ஒரு வட்டாரம் கரைத்துறைப்பற்று பிரதேச சபையுடனும் இணைக்கப்பட்டு அவர்களுக்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

திட்டமிட்டவகையில் எமது மாவட்டங்களின் இனப்பரம்பலை மாற்றும் நோக்கத்திலேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. அரசியல் நோக்கமாகச் செய்யப்பட்ட இந்தச் செயற்பாடு அங்குவாழும் மக்களுக்கு பல பிரச்சினைகளை ஏற்படுத்துவதோடு, குடியேற்றப்பட்ட மக்களுக்கும் பூர்வீக குடிமக்களுக்குமிடையே மோதல் நிலையை ஏற்படுத்தும். குடியேற்றவாசிகளுக்கான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்காக பூர்வீக தமிழ் மக்களுடைய குளங்கள், விளைநிலங்கள் அபகரிக்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அதில் ஒன்றுதான் திரிவைத்தகுள ஆக்கிரமிப்பு. மகாவலி அதிகாரசபை, வனவளத் திணைக்களம் பொறுப்பற்ற வகையில் இனமுரன்பாட்டைத் தோற்றுவிக்கும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. கிவுலுஓயா நீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் பல குளங்கள், அதனோடிணைந்த காணிகள் நீரேந்துப் பகுதிக்குள் உள்வாங்கப்படும். எனவே இவற்றை ஆராய விசேட குழுவொன்றை நியமித்து தீர்வு காணவேண்டும்-என்றார். (க-110)



# புதுக்குடியிருப்பில் களைகட்டும் மாவீரர் நாள் ஏற்பாடுகள்!

முல்லைத்தீவு, நவ.21

போரில் உயிரிழந்த மாவீரர்களைப் போற்றி வணங்கும் மாவீரர் நாளுக்கான அலங்கரிப்பு ஆயத்தப் பணிகள் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களைப் போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மாவீரர் நாள் நிகழ்வுகளை மேற்கொள்ளத் தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது. அந்தவகையில் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் புலம்பெயர் தேசத்து உறவுகளும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கமும் புதுக்குடியிருப்பு வாழ் உறவுகளும் இணைந்து மாவீரர் நாள் ஆயத்தப் பணிகளை முன்னெடுத்துள்ளன. (சு-இ)


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை
## பெறுகைகள் அறிவித்தல் - பாதுகாப்புச்சேவை 2026

1. பாதுகாப்புச்சேவையின் விபரமும் வைப்புத் தொகைகளும்

| இல | விபரம் | காலப்பகுதி | மதிப்பீடு (Day & Night 12hrs shift duty per day) | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்புச் சேவை வழங்கல் -பிரதான அலுவலகம் (வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை) | 01/01/2026 – 31/12/2026 | 04 Nos | 1000.00 | 20000.00 |

2. வைப்புக்கள்
பெறுகைக்கான வைப்புத்தொகைகளை (மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும்) வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் வருமான பிரிவில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். தெரிவு செய்யப்படாத பெறுகை மனுதாரர்களுக்கு பெறுகைகளுக்கான ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் மீளளிக்கப்படும்.

3. வியாபாரப் பதிவு சான்றிதழ்
பெறுகைப் பத்திரம் கோரும் நிறுவனங்கள் வியாபாரப் பதிவு படிவத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வடமாகாணத்தில் நிரந்தரப் பதிவினைக் கொண்டிருத்தல் அல்லது தொடர்பு கொள்ளக்கூடிய தமது கிளை அலுவலகத்தினையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

4. அனுபவ சான்றிதழ்
கடந்தகால, நிகழ்கால அனுபவச்சான்றிதழ்களையும் பெறுகை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காவல் சேவை வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான வலுவிலுள்ள அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. வரி
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய சகல வரி அறவீடுகளுக்கும் சகல வரி செலுத்தல்களுக்கும் அனைத்து ஒப்பந்தக்காரர்களும் உட்படுதல் வேண்டும்.

6. கூலி வீதங்கள்
6.1. பாதுகாப்பு சேவை ஊழியர்களினுடைய ஆகக்குறைந்த சம்பளமானது சம்பள சபையினால் நிர்ணயிக்கப்படும் கூலி வீதத்துடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும்.
6.2. கூலி வீதங்கள் உட்பட சித்தியடைவதற்கான தகைமைகளை ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் கொண்டிருக்குமிடத்து சேவையின் தரம் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

7. பெறுகைப் படிவங்கள்ஃஆவணங்கள்
பெறுகை ஆவணங்கள் 21.11.2025 ஆம் திகதி தொடக்கம் 12.12.2025 ஆம் திகதி வரை அலுவலக கடமை நேரத்தில் காலை 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பெறுகைப் படிவங்கள் அனைத்தும் இரு பிரதிகளில் மூலப்பிரதி, நகல் பிரதி எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

8. பெறுகைகள் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறையும் இறுதித் திகதியும்
சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் "தலைவர் பெறுகைகள் குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படுவதன் மூலம் கிடைக்கப்பெறல் வேண்டும். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவை 2026" என குறிப்பிடல் வேண்டும். பெறுகைகள் வைப்புத் தொகையை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை பெறுகைப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சகல முத்திரை இடப்பட்ட பெறுகைகளும் 12.12.2025 பி.ப 3.30 மணிவரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

9. தொழிற்சட்டங்கள்
ETF, EPF பங்களிப்புக்கள் உட்பட தொழிற்திணைக்கள நடைமுறைகளுக்கு இணங்கி செயற்படல் வேண்டும்.

10. பெறுகைகள் திறத்தல் மற்றும் தீர்மானம்
பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் பெறுகைப்பத்திரங்கள் 12.12.2025 பி.ப 3.30 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ பெறுகைகள் திறக்கும் போது சமூகமளிக்கலாம். பெறுகை நிபந்தனைகளுக்கு அமைவாக அனுப்பப்படாத ஆவணங்களும் பூரணமாக நிரப்பப்படாத நடைமுறை விலைகளுடன் ஒவ்வாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேற்படி பெறுகை கோரல்களை இரத்து செய்யவோ, நிறுத்தி வைக்கவோ, பகுதியாக வழங்குவதற்காகவோ, புதிதாக கோருவதற்கோ வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு பூரண அதிகாரமுண்டு. பெறுகை தொடர்பான பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களை 024-2225737 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தலைவர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
வவுனியா

21.11.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு:077 386 6250**

(CS 59300) A

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**

**நெல், உமி தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு நெல், உமி கொள்வனவு செய்யப்படும்.
விலை பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 777 5068


# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக் கடைகள், குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் மற்றும் சிற்றுண்டிச்சாலை , வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், வாகனத்தரிப்பிடக் குத்தகை, நடமாடும்கடைகள், தள்ளுவண்டில்கள், விளம்பர ஒலிபரப்பு சேவைகள் என்பவற்றுக்கான**

## கேள்வி அறிவித்தல் - 2026 (01.01.2026 -31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 21.11.2025 – 08.12.2025
(மு.ப 9.00 - பி.ப.2.30.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 09.12.2025 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 09.12.2025 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 09.12.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கவேண்டும்.
3. **சந்தை சுத்திகரிப்பு பணிகளை குத்தகையாளர் தாமே பணியாளர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட தரம் பிரிக்கப் பட்ட திண்மக்கழிவுகளையும், திரவக்கழிவுகளையும் அகற்றும் பணி மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.**
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப் படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப் பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. அதனை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் பார்வையிடமுடியும்
8. **கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 15.12.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.**

### மீள்கேள்வி அறிவித்தல் 2026 - (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை மீன்சந்தை | | 10,000.00 | 11,500,000.00 |
| 2 | குருநகர் மீன்சந்தை | | 10,000.00 | 10,132,022.00 |
| 3 | பெரியகடை மரக்கறிச்சந்தை | | 10000.00 | 2,300,000.00 |
| 4 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 120,101.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,255,500.00 |
| 6 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 58,100.00 |
| 7 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 1,801,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 2,740,000.00 |
| 9 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 1,021,511.00 |
| 10 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,200,000.00 |
| 11 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 1,285,000.00 |
| 12 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 13 | செங்குந்த கருவாட்டுக்டை | இல.01 | 5,000.00 | 141,000.00 |
| 14 | செங்குந்த கோழிஇறைசிக்கடை | இல 04 | 5,000.00 | 663,500.00 |
| 15 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல05 | 5,000.00 | 1,075,000.00 |
| 16 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல06 | 5,000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 626,234.98 |
| 18 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 71,100.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 411,500.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 22 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 24 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.00 |
| 25 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 26 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 27 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 630,000.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,401.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 441,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,111.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 712,210.00 |

### கேள்வி அறிவித்தல் (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1 | துரையப்பா விளையாட்டரங்கு சிற்றுண்டிச்சாலை, துரையப்பா வியைாட்டு அரங்கு நடமாடும் கடை இல 01, சுப்பிரமணியம் பூங்கா- நடமாடும்கடை இல 01, இல 02 | 61,000.00 | 655,000.00 |
| 2 | வாகனத்தரிப்பிடக் குத்தகை | 40,000.00 | 4,379,460.00 |
| 3 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக உள்ள வாகனப் பாதுகாப்பு நிலையமும் நல்லூர் மலசலகூடசுத்திகரிப்பு பணியும் | 5,000.00 | 476,000.00 |
| 4 | நீதிமன்ற துவிச்சகசக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 550,000.00 |
| 5 | நவீன சந்தை விளம்பர ஒலிபரப்பு சேவை | 25,000.00 | 2,597,647.06 |
| 6 | செங்குந்த விளம்பர ஒலிபரப்பு சேவை | 7,000.00 | 500,047.07 |
| 7 | நடமாடும் கடை முத்திரச்சந்தை இல 01 | 20,000.00 | 481,000.00 |
| 8 | நடமாடும் கடை முத்திரச்சந்தை இல 02 | 20,000.00 | 418,999.00 |
| 9 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | 20,000.00 | 212,500.00 |
| 10 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | 20,000.00 | 207,000.00 |
| 11 | நடமாடும் கடை இல 01 - பண்ணை மீன்சந்தை | 20,000.00 | 216,000.00 |
| 12 | நடமாடும் கடை இல 02 - பண்ணை மீன்சந்தை | 20,000.00 | 211,200.00 |
| 13 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 03 | 20,000.00 | 180,000.00 |
| | **நடமாடும் வியாபாரம் .- நிபந்தனை.** 1. நடமாடும் வியாபார விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து மாசநகரசபையில் அனுமதி பெறப்பட வேண்டும். 2. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்யவேண்டும். | | |
| 14 | தள்ளுவண்டில் இல 01 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் இல 02 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் இல 03 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் இல 04 | 20,000.00 | 120,000.00 |
| 18 | தள்ளுவண்டில் இல 05 | 20,000.00 | 120,000.00 |
| 19 | தள்ளுவண்டில் இல 06 | 20,000.00 | 120,000.00 |
| 20 | தள்ளுவண்டில் இல 07 | 20,000.00 | 120,000.00 |
| 21 | பெரியகடைமரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடைக்கு வடகிழக்கு மூலையாகவும் சந்தையின் வைரவர் கோவிலின் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கில் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 250,000.00 |

**முதல்வர் .**
**யாழ் மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR/40535) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முழங்காவில் இளநிலா குடியிருப்பு கிராமத்தில் இருபது வறுமையான பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ரூபாய் 5000/= பெறுமதியான உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன. LIONS INTERNATIONAL 306 D12 மானிப்பாய் சிற்றி லயன்ஸ்கழக தலைவர் LION கிருபாகரன் தலைமையில், DISTRICT CONSULTANT ( BRAND IMAGE) LION ஸ்ரீவிமலேஸ்வரன் அவர்களின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது. 306 D12 மாவட்ட ஆளுநர் LION DR. K. M. பத்மநாதன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.


# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2026

சபையானது 2026 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

01. காகிதாதிகள், எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. அலுவலக தளபாடங்கள் மரம்/இரும்பு/பிளாஸ்ரிக் ஏனையவை
04. இதர (others) மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள்
05. மின்சார, மின் பாவனைப்பொருட்கள் மற்றும் மின்னணுப்பொருட்கள்
06. வன்பொருட்கள், கற்கள், மணல், கிரவல், ஏனையவை மற்றும் கட்டுமானப்பொருட்கள்
07. விவசாய இயந்திர சாதனங்கள் மற்றும் உள்ளீடுகள்
08. புடவைவியாபாரம் (டெக்ஸ்டைல்ஸ் பொருட்கள் மற்றும் திரைச்சீலைகள்)
09. விளையாட்டுப்பொருட்கள் மற்றும் விளையாட்டுஉபகரணங்கள்
10. ஆலை மற்றும் இயந்திரங்கள்
11. சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்கல்
12. மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வழங்கல்
13. நூலகங்களுக்கான நூல்கள்
14. தீந்தை வகைகள் (paints) நிறம் தீட்டும் பொருட்கள்
15. நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புகள் (Hume Pipe) மற்றும் ஏனைய பொருட்கள்
16. வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்
17. எரி பொருட்கள், உராய்வு நீக்கிகள்
18. இரும்பு பொருட்கள்
19. தீராந்திகள், பலகைகள்
20. பனைமரங்கள், சலாகைகள்
21. வாகனங்களுக்கான டயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
22. கணனி, பிரதியாக்கல் இயந்திரம், மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
23. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள்
24. பாதணிகள், தோற்பொருட்கள்
25. அலங்காரப்பொருட்கள்
26. இலத்திரனியல் பொருட்கள்
27. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்

**சேவைகள்**

01. அலுவலக உபகரணங்களைப் பழுது பார்த்தல்
02. அலுவலக தளபாடங்கள் பழுது பார்த்தல்
03. வாகனங்கள் பழுது பார்த்தல்
04. மின்சார மற்றும் மின்னியல் பொருட்கள் பழுது பார்த்தல்
05. அனைத்து வகையான அச்சிடுதல்மற்றும் புத்தகங்கள் கட்டுதல்
06. வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்
07. வாடகைக்கு அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல்
08. ஒளி மற்றும் ஒலி அமைப்பு மற்றும் மின்சாரப் பொருட்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்
09. பாதுகாப்பு மற்றும் துப்பரவு சேவைகள்
10. வர்ணம் தீட்டும் வேலைகள்
11. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள் (வெல்டிங் வேலைகள்)
12. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
13. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்.
14. வாகனங்களின் ரியூப் ஒட்டுதல்.
15. வாகன சுத்திகரிப்பு மேற்கொள்ளல்.
16. கோலவுடை, சீருடை தைத்தல்.
17. கணனி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல், சுத்திகரிப்பு (Service).
18. இறப்பர் முத்திரை தயாரித்தல்.
19. வாகனங்கள் திருத்தம் செய்தல்.
20. கழிவகற்றல் சேவைகள்.

**ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும்)**

01. கட்டட நிர்மாணம் மற்றும் மறுசீரமைப்பு வேலைகள்
02. நீர்பாசனம், நெடுஞ்சாலை, பாரம் மற்றும் நீர்வழங்கல் கிணறு மற்றும் குழாய்கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்

- பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
- விண்ணப்பபடிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் முன் அலுவலகத்தில் (front Office) பெற்றுக்கொள்ளலாம்.
- ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்/ஒப்பந்த சேவைக்கான விண்ணப்பம் - 2026" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தலைவர், தலைமைக்காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்படிவங்கள் 12.12.2025 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 024-2225737/024-2050067 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**வவுனியா.**



# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 24.10.2025 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் பரமேஸ்வரி நாகராசா (ஆசை)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.11.2025) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் (சங்கத்தானை) நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சப்பச்சிமாவடி,
சாங்கத்தானை, சாவகச்சேரி. (CS/59957) J-1

குடும்பத்தினர்.
077 529 6242



# மரண அறிவித்தல்



**நடராஜா நவீனராஜா**

**(ஜோஸ் மில் முன்னாள் உரிமையாளர்)**

உரும்பிராயை பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா நவீனராஜா அவர்கள் நேற்று (20.11.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா பொன்மலர் தம்பதியரின் இரண்டாவது மகனும், காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜோய் நற்குணவதி, மற்றும் ரீட்டா (கனடா), காலஞ்சென்ற நேசபரன், மற்றும் நந்தினி (கனடா), காலஞ்சென்ற நேசராஜா மற்றும் நவீனி (கனடா), முத்தழகன் (ஜோய் பாமஸி பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரன், மற்றும் தவநேஸ்வரன் (கனடா), யோகராணி (அவுஸ்திரேலியா) இந்திராணி (கனடா), திலகராணி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், கஜீவன் (கனடா), சுஜீவன் (விமானப்படை), நயனி (கனடா), ஜனனி (இந்தியா), மனோஜன் (அவுஸ்திரேலியா), வினோஜன் (அவுஸ்திரேலியா), வித்தியா (கனடா), சுபோஜினி (அவுஸ்திரேலியா), ஆரணி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2025) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோவில் வீதி,
[illegible], வட்டுக்கோட்டை.
075 5445043 / 077 308 6721

தகவல் :
குடும்பத்தினர்

(CR 46538) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## தே. ம. சக்தியின் பட்ஜெட் தங்காலையில் தோற்கடிப்பு

கொழும்பு, நவ. 21

தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் உள்ள தங்காலை நகரசபையின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளது. வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 9 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதற்கமைய, ஒரு மேலதிக வாக்கினால் தங்காலை நகரசபையின் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி வெற்றி யீட்டியுள்ளது.

(ச-இ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தின்

# பிரதிப் பொலிஸ்மா அதிபராக புத்திக்க சிறிவர்தன பதவியேற்பு

யாழ்ப்பாணம், நவ. 21
வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன நேற்றுத் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.
காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வ சர்வமத வழிபாடுகளுடன் ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன தனது கடமைகளை பொறுப்பேற்றார்.
வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த திலக் தனபால வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டநிலையில் புதிய சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தனது கடமைகளை பொறுப்பேற்றார். குறித்த நிகழ்வில் மாவட்ட



பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-26)

# பெரியகரிசல் கிராமத்தில் நீரிணைப்பு முகாம் இன்று

மன்னார்,நவ. 21
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஏற்பாட்டில் மன்னார் பெரியகரிசல் கிராமத்துக்கு புதிய நீர் இணைப்பு வழங்குவதற்கான முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 வரை பெரிய கரிசல் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.
பயனாளிகள் புதிய நீர் இணைப்பைப் பெற்றுக் கொள்ள தேசிய நீர் வழங்கல் அலுவலகத்துக்குச் சென்று, புதிய இணைப்புக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று , அதை நிரப்பி தேவையான ஆவணங்களுடன் மீண்டும் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பின்னர், அதிகாரிகள் நேரடியாக வீடுகளுக்கு வருகை தந்து ஆய்வு மேற்கொண்டு, மதிப்பீட்டின் அடிப்படையில் வங்கியில் பணம் செலுத்திய பின்னரே புதிய இணைப்பு வழங்கப்படும்.
இந்தச் சிரமங்களைத் தவிர்த்து, நீரிணைப்பு செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்குடன், ஒரே நாளில் விண்ணப்பம் முதல் கட்டணம் செலுத்துதல் வரை அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்கும் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-56)

# மட்டக்களப்பு தாந்தாமலையில் தொல். திணைக்களப் பலகை!

மட்டக்களப்பு, நவ. 21
மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப்பெருநிலம் மண்முனை தென்மேற்கு பிரதேச பிரிவில் உள்ள தாந்தாமலை முருகன் ஆலயத்துக்குச் செல்லும் வீதிகளில் நேற்று தொல்பொருள் திணைக்களத்தால் அறிவித்தல் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன.
'தாந்தாமலை தொல்லியல் இடம்' என மூன்று மொழிகளாலும் எழுதப்பட்ட வகையில் அந்தப் பலகை அமைந்துள்ளது.
திருகோணமலையில் அடாத்தாக அமைக்கப்பட்டு விகாரை தொடர்பிலும், அங்கு அத்துமீறி வைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை தொடர்பிலும் தற்போது பெரும் பதற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில், தாந்தாமலை தமிழர்களின் பூர்வீக நிலத்தில் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை நிறுவும் திட்டமாக இது அமைந்துள்ளதா என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)



# கலாசாரப் பெருவிழா

கிளிநொச்சி, நவ.21
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கரைச்சிப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசாரப்பெருவிழா கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
கரைச்சிப் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் அஜிதா பிரதீபன் சிறப்பு விருந்தினராகவும், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகரும் சமய, சமூக, இலக்கிய விற்பன்னர் செல்வராணி சோமசேகரம் பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.
விழாவில் கலைநிகழ்வுகள், கரை எழில் 9 நூல்வெளியீடு, மற்றும் கலைஞர்களுக்கான கரை எழில் விருது, கலைஞர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கல் என்பன இடம்பெற்றன. குறித்த நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் கரைச்சிப் பிரதேச சபைத்தவிசாளர் அ.வேழமாலிகிதன், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ,பிரதேசசபை உறுப்பினர்கள், மாவட்ட பொது அமைப்பு சார்ந்தோர், கலைஞர்கள், பிரதேச மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)


# மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 07 . 1961

மறைவு
20 . 11 . 2025

## சாம்பசிவம் சத்தியேந்திரா

மாவடி வீதி, சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாம்பசிவம் சத்தியேந்திரா அவர்கள் நேற்று (20.11.2025) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம் - சரஸ்வதி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற சத்திய லோஜினி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சத்தியவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயந்திகுமார் (விக்னா கல்வி நிலையம், விக்னா இரும்பகம்), காலஞ்சென்ற நடனேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், விதுர்ஷிகா (விரிவுரையாளர் திறந்த பல்கலைக்கழகம் மட்டக்களப்பு), தேவதர்ஷன் (ஆசிரியர் மட்டக்களப்பு), லதுர்ஷனன் (பொறியியலாளர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான லோகராசா - நாகேஸ்வரி, தர்மலிங்கம் மற்றும் விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான மருதலிங்கம் - கனகமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவடி வீதி,
சுதுமலை தெற்கு.

தகவல்: குடும்பத்தினர்
076 264 6514


## கிணற்றுக்குள்...

யாழ்ப்பாணம் - ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த, சின்னத்துறை ராஜவதனன் (வயது-40) என்ற நபரே இவ்வாறு கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## திடீர்...

தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
நேற்று நள்ளிரவு அந்தக் குழந்தைக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டு வாந்தி எடுத்துள்ளது. இதையடுத்து, வீட்டார் சங்கானை பிரதேச மருத்துவமனைக்கு உடனடியாகக் குழந்தையைக் கொண்டுசென்ற நிலையில், அந்தக் குழந்தை முன்னதாகவே உயிரிழந்து விட்டது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனையை நடத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.
அந்த ஆண்குழந்தையுடன் இரட்டைக் குழந்தையாகப் பிறந்த மற்றொரு பெண் குழந்தை கடந்த ஏப்ரல் மாதம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-100-26)

## மூதாட்டி...

பந்தி பகுதியைச் சேர்ந்த அழகுசுந்தரம் நந்தினி (வயது-62) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

யான மழைக்குச் சாத்தியம் உள்ளதாக முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவிவந்த மழையுடனான காலநிலை தற்போது ஓய்ந்துள்ளது. எனினும், இலங்கையின் தென்கிழக்கே புதிய வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியொன்று உருவாகியுள்ளதால், வடமாகாணம் மீண்டும் மழையை எதிர்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்த மழை மிதமானது முதல் கனமானது வரை இருக்கலாம் - என்றுள்ளது. (அ-ம-66)

## மாவீரர்...

மாகிறது. நவம்பர் 27ஆம் திகதி 1982 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியான லெப்.கேணல் சங்கர் முதல் வித்தாக வீரமரணமடைந்தார். அந்த நாளை மாவீரர் நாளாக 1989ஆம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் அறிவித்தார். அன்றிலிருந்து வருடம்தோறும் இந்த நாளில் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, மாவீரர் நாளை நினைவுகூரும் வகையில் 2025ஆம் ஆண்டுக்கான மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகிறது. இதனையொட்டி வடக்கு கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் கடந்த பல நாள்களாகத் துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுபெற்றுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி எள்ளங்குளம் துயிலுமில்லம் போன்ற துயிலுமில்லங்கள் தொடர்ந்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிலையில் அதனை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள காணிகளில் மாவீரர் நாள் நிகழ்வுகளைக் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடமராட்சி ஊடுத்துறை மற்றும், தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லங்களிலும் மாவீரர் நாள் நிகழ்வுகளைக் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழர் வரலாற்றை எம் சந்ததிகளுக்குக் கடத்தும் நோக்கில் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மாவீரர் வாரத்தின் இறுதி நாளான எதிர்வரும் வியாழக்கிழமை வரை தினமும் நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாவீரர் நினைவுத் தூபியடியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்படவுள்ளன.

அதுமாத்திரமன்றி யாழ்.மாவட்டத்தில் சுன்னாகம், இணுவில், ஏழாலை, கொக்குவில், தெல்லிப்பழை உட்படப் பல பகுதிகளிலும் இம்முறை பேரெழுச்சியுடன் மாவீரர் வார நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

மாவீரர் நாளை முன்னிட்டு சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்க பொது மண்டபத்தில் குருதிக்கொடை முகாமொன்று இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## மீள்..

ளார் - இவ்வாறு வீடமைப்பு நிர்மாண மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் மருத்துவர் எச்.எம்.சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வீடமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. இதன்போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்தம் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. எனினும், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முழுமையடையவில்லை. இது கவலைக்குரிய விடயமாகும். எமது மக்கள் தொடர்ச்சியாக இவ்வாறு இருக்க முடியாது. எனவே, இந்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில், வீடமைப்பு நடவடிக்கைக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீள்குடியேற்றச் செயற்பாடுகள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு முழுமைப்படுத்தாத வீடுகள் தொடர்பாகவும் கவனமெடுக்கப்படும் - என்றார். (அ-ம-66)

## வலி.வடக்கில்...

அமர்வு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றபோது பிரதேசசபை உறுப்பினர் சாருஜன் குறித்த தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

'தாயக விடுதலைக்காக உயிரிழந்தவர்களை அஞ்சலிக்கும் வகையில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. வலிகாமம் வடக்கில் பல மாவீரர் குடும்பங்கள் உள்ளமையால் அன்றைய தினத்தில் தனியார் கல்வி நிறுவனங்களையும், இறைச்சிக் கடைகளையும் மூட வேண்டும்' என்று தனது முன்மொழிவில் அவர் கோரிக்கை விடுத்தார். அவரின் முன்மொழிவு பிரதேசசபை உறுப்பினர்களால் ஏக மனதாக ஏற்கப்பட்டது. இதேவேளை, சபையின் நேற்றைய அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஆனந்த...

காரணமாகக் காலமாகியுள்ளார். இதனால், ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் இருவரும் தற்போது நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர்.

கிளிநொச்சி, மருதநகரைச் சேர்ந்த ஆனந்தசுதாகர் 2008ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் கடந்த 17 ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரின் மனைவி 2018ஆம் ஆண்டு காலமானதை அடுத்து, இரு பேரப்பிள்ளைகளையும் அவர்களது பேர்த்தியாரே வளர்ந்து வந்தார். ஆனந்தசுதாகரை விடுவிக்கவேண்டும் என்று பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தபோதும், அது சாத்தியமாகாத நிலையில், பேர்த்தியார் தேவதாஸ் கமலா நேற்றுமுன்தினம் காலமாகியுள்ளார்.

தான் உடற்சுகவீனம் அடைந்துள்ளதாகவும், விரைவில் இறந்துவிடுவேன் என அச்சமடைவதாகவும் ஆனந்தசுதாகரின் தாயார் பலமுறை கூறியுள்ளார். தான் இறப்பதற்கு முன்னர், ஆனந்த சுதாகரை விடுவிக்க வேண்டும். இல்லையேல் பிள்ளைகள் நிர்க்கதிக்கு உள்ளாகி விடுவார்கள் என நிதியமைச்சர் ஹர்ஷனவிடம் மன்றாட்டமான கோரிக்கையையும் சில வாரங்களுக்கு முன்னர் முன்வைத்திருந்தார். இவ்வாறான நிலையிலேயே, தனது மகனை மீட்டு அவரிடம் பேரப்பிள்ளைகளை ஒப்படைப்பதற்கான எந்தவொரு முயற்சியும் பயனளிக்காமல் அந்த வயோதிபத் தாய் நேற்று முன்தினம் காலமானார்.

அவருடைய மறைவுக்கு குரலற்றவர்களின் குரல் அமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது. 'சமூக அக்கறை கொண்ட அந்தத் தாயாரின் ஆத்மா சாந்தியுற வேண்டுமாக இருந்தால், ஒட்டுமொத்த உறவுகளையும் இழந்து அவலம் சுமந்து வாழ்கின்ற இந்தப் பள்ளிப் பிஞ்சுகளின் தந்தையான, 'அரசியற் கைதி ஆனந்த சுதாகர்' விடுதலைபெற்று வீடுதிரும்பி, அந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாப்பதற்கு தமிழ்ச் சமூகமாக நாம் வழிசமைக்க வேண்டும்' என்று அந்த இரங்கல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26-27)

## கையூட்டு...

அந்த பொலிஸ் சார்ஜண்ட் கையூட்டு கேட்ட விடயம் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டு, அது தொடர்பில் முறைப்பாடும் வழங்கப்பட்டிருந்தது. இதையடுத்தே, லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் அவர் கையும் மெய்யுமாகக் கைது செய்யப்பட்டார். அந்த நபர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-110)

## புதிய...

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு, ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்தச் சந்திப்பில் இனப்பிரச்சினைக்குத் தம்மால் முன்வைக்கப்பட்ட வலியுறுத்தல் தொடர்பில் சுமந்திரன் தனது சமூக வலைத்தளங்களில் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதிவிலேயே, 'இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய எத்தனங்கள் அவசியமில்லை. ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகளின் ஊடாக அந்தத் தீர்வைக் கண்டு கொள்ள வேண்டும்' என்று தாம் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

'பிரிக்கப்பட முடியாத நாட்டின் கட்டமைப்புக்குள், மாற்றப்பட முடியாத அதிகாரப் பகிர்வு' என்ற தமிழரசுக் கட்சியின் கொள்கைக்கு அமைய, '2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில்' இடம்பெற்ற அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளை முன்கொண்டு செல்லும் வகையில் அந்தத் தீர்வு அமைய வேண்டும். அந்தத் தீர்வுத் திட்டத்தை எந்தப் பெயரால் அழைத்தாலும் பிரச்சினையில்லை என்பதே தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு எனத் தாம் முன்வைத்ததாகவும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில்' இடம்பெற்ற அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் 'ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பு உருவாக்கம்' என்று அறியப்பட்டது. அந்த அரசியலமைப்பு உருவாக்கல் குழுவில் அல்லது வழிநடத்தல் குழுவில் சுமந்திரனும் ஜனாதிபதி அநுரவும் உறுப்பினர்களாக இருந்தனர். எனவே, ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பின் உருவாக்கத்தையே சுமந்திரன் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளார் என்று நம்பப்படுகின்றது.

குறித்த, 'ஏக்கிய இராச்சிய' அரசியலமைப்பு பெரும் சர்ச்சைகளைக் கடந்த காலங்களில் ஏற்படுத்தியிருந்தது. 'ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பு ஒற்றையாட்சிக் கட்டமைப்பை இறுக்கமாக வலியுறுத்துகின்றது' என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கடந்த பல தடவைகள் பகிரங்கமாக விமர்சித்திருந் தார். ஆனால், 'ஏக்கிய இராச்சிய' அரசியலமைப்பு ஒற்றையாட்சிக் கட்டமைப்பு அல்ல என்றும், அது தவறான முறையில் அர்த்தப்படுத்தப்படுகின்றது எனவும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் மறுத்துரைத்திருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, ஜனாதிபதி அநுரவுக்கும், தமிழரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பின்போது முன்னைய நகர்வுகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்று சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

'2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை உருவாக்கப்பட்ட 'ஏக்கிய இராச்சிய' என்ற அரசியலமைப்பைத் திருத்தி முடித்துவிட்டதாகவும், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றவுள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேசத்துக்கு அறிவித்துள்ளது' என கடந்த மாதத்தின் ஆரம்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அனுமதி...

அறிவிக்கப்பட்டுள்ளது. வேலணைப் பிரதேசசபையின் கடந்த அமர்வின் போது, நுண்கடன் நிதி நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வேலணை பிரதேசசபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந் முன்மொழிவைச் சமர்ப்பித்திருந்தார். அது சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்கப்பட்டிருந்தது.

சபையின் நேற்றைய அமர்வின்போது, குறித்த முன்மொழிவை எவ்வாறு செயற்படுத்துவது என்ற விவாதங்கள் இடம்பெற்றன. இதன்போதே, 2026ஆம் ஆண்டுமுதல் வேலணை பிரதேசசபையின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதிகளில் சபையின் அனுமதி இல்லாமல் நிதி நிறுவனங்கள் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அத்துடன் 30 தொடக்கம் 40 வீதம் வரை அறவிடப்படும் நியாயமற்ற வட்டி வீதங்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

1. இருபாலை இந்து கௌரவகுலம் (K), 1997, ரோகிணி, I.T Degree Ayurvedic Doctor சிவந்த அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. (55043)

சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc (UK), UK Citizen அழகான மெலிந்த மணமகளுக்கு மணமகன் தேவை. (54543)

2. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, கௌரவகுலம் (K), Phd in Bio Chemistry, Germany Citizen அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - (54321)
3. சாவகச்சேரி, இந்து கௌரவகுலம் (K), 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental Doctor, மெலிந்த மணமகளுக்கு மணமகன் தேவை. (54201)
4. இருபாலை, இந்து கௌரவகுலம் (K), 1998, உத்தராடம், HNDA in Accounting அழகான மணமகளுக்கு மணமகன் தேவை. - (49846)
5. அச்சுவேலி, இந்து கௌரவகுலம் (K), 1995, பூரம், B.com Accounts அழகான மெலிந்த Australia Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. - (43129)
6. அச்சுவேலி, இந்து, கௌரவகுலம் (K), 1992, ரோகிணி, BSc (Hons) in biological Science மெலிந்த மணமகளுக்கு மணமகன் தேவை. - (41136)
7. கந்தரோடை, இந்து கௌரவகுலம் (K), 2000, திருவாதிரை, Software Engineering மெலிந்த மணமகளுக்கு மணமகன் தேவை. - (35870)
8. இளவாலை, இந்து கௌரவகுலம் (K), 1987, திருவாதிரை, Dentist Doctor, Canada Citizen மணமகளுக்கு மணமகன் தேவை. - (32087)
9. சுன்னாகம், இந்து, கௌரவகுலம் (K), 1995, திருவாதிரை, BSc (Hons) Microbiologi, Translational data Scientist மணமகளுக்கு மணமகன் தேவை. - (30663)

நீங்களாகவே எமது Website - www.thaalee.com இல் உங்களுக்கு பொருத்தமானவர்களை தெரிவுசெய்து கொள்ளலாம்.

S.Sharma J.P, www.thaalee.com, Whats app - 077 539 3728

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
IFSLS

விண்ணப்பித்து விட்டீர்களா!!
அரச வட்டியற்ற கடன்திட்டம்

இன்னும் ஒரு வாரம் மாத்திரமே உள்ளது

BSc (Hons) in Information Technology, Specialising in
- Artificial Intelligence
- Software Engineering
- Data Science
- Information Technology
- Cyber Security

BBA (Hons), Specialising in
- Accounting & Finance
- Business Analytics
- Human Capital Management
- Business Management
- Marketing Management
- Logistics & Supply Chain Management

விண்ணப்பிக்கும் முறை
- northernuni.lk/application-form
- www.studentloans.mohe.gov.lk


விண்ணப்பங்கள் முடிவு திகதி
30.11.2025

021 7534 807
CONTACT VIA WHATSAPP 077 147 1471




## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
05 • 04 • 1937



மறைவு
22 • 10 • 2025

எம்மை நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த 22.10.2025 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகமுத்து சுப்பையா
### (அம்பாள் ஸ்ரோர்ஸ்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த சபிண்டீகரணக் கிரியை இன்றையதினம் (21.11.2025) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு: தயவு செய்து இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

வராத்துப்பளை, புலோலி வடகிழக்கு,
புலோலி, பருத்தித்துறை.

(CR/46536) J-1

குடும்பத்தினர்

## மாணவர்கள் மத்தியில் புகைப்பிடித்தல் பழக்கம்

யாழ்.,நவ.21

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகை பிடித்தல் பழக்கம் அதிகரித்துள்ள தாக பேராதனை போதனா மருத்து வமனையின் சுவாச நோய்க ளுக்கான நிபுணர் மருத்துவர் துமிந்த யசரத்ன தெரிவித்துள்ளார்.

14 அல்லது 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் பலர் சிகரெட்டுகளைப் பரிசோதித்துப் பார்க்க முனை கின்றனர். இந்தப் புகைபிடித்தல் பழக்கமானது நுரையீரல் தொடர்பான நோய்களை உருவாக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## காணி விற்பனைக்கு

யாழ் சிற்றி பாம், 755 மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் எனும் இடத்தில் மானிப்பாய் வீதியோரமாக சுற்றுமதிலுடன் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விரும்பிய அளவுகளில் பிரித்தும் கொடுக்கப்படும். நேரில் வருகை தரவும்.



# நெற்பயிர்களில் பரவுகிறது இலை மடிச்சுக்கட்டி நோய்

## ஆலோசனைகளைப் பெறுமாறு வடக்கு விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.21

தற்போது மழையுடனான குளிரான கால நிலை காரணமாக நெற்பயிரில் இலை மடிச்சுக் கட்டி நோய்த் தாக்கம் அதிக மாக பரவ ஆரம்பித்துள்ளது. இலை மடிச்சுக் கட்டி நோய்த் தாக்கம் உணரப்ப டும் நிலையில் விவசாயிகள் உரிய காலப் பகுதியில் அருகில் உள்ள விவ சாயப் போதனா ஆசிரியர்களின் ஆலோ சனைகளைப் பெறவேண்டும் என்று வடக்கு மாகாண பிரதி விவசாயப் பணிப் பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் தென்மராட்சிப் பகுதி களில் உள்ள வயல் நிலங்களில் குறித்த நோய்த் தாக்கம் அவதானிக்கப்பட்டுள் ளது. ஏனைய பகுதிகளிலும் நோய்த் தாக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் நிலவுகிறன.

ஆகவே விவசாயிகள் குறித்த நோய்த் தாக்கத்தை ஆரம்பத்தில் கட்டுப்படுத்து வதற்கு அருகில் உள்ள விவசாயப் போத னாசிரியர்களை அணுகி அவர்களின் ஆலோசனையைப்பெற்று கிருமிநாசினி களை விசுறவேண்டும்- என்றார். (ச-27)

## நடப்பாண்டில் 105 துப்பாக்கிச்சூடுகள் 57 பேர் உயிரிழப்பு

இலங்கையில் இவ்வருடத்தின் இதுவரை யான காலப் பகுதிக்குள் 105 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின்போது 57 பேர் உயிரிழந்துள்ளதுடன் 56 பேர் காய மடைந்துள்ளனர். அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல் களுக்கு இடையிலான மோதல்கள் காரண மாக இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 21.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org